

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.06.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் மாவட்ட குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளையின் கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (17.06.2023) சென்னை, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணா சாலை டேம்ஸ் சாலை ஜெனரல் பீட்டர்ஸ் சாலை சந்திப்பில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய நடை மேம்பாலம் அமைக்கப்படுவது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் மதன் மோகன், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னை விமான நிலையத்தில் பழுது பார்க்கும் மையம்!

சென்னை, ஜூன் 18-

நாடு முழுவதும் சென்னை உள்பட 8 பன்னாட்டு விமான நிலையங்களில் விமானம் பழுது நீக்கும் மற்றும் பராமரிப்பு மையம் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்னை விமான நிலையத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் புதிதாக விமான சேவை தொடங்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் விமான சேவைகளை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கு இந்திய விமான நிலைய ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவில் விமான சேவைகள் அதிக அளவில் இருந்தாலும், விமானங்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்வது, விமானங்களை பழுது பார்ப்பது போன்ற மையங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையம் டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட 8 பன்னாடு விமான நிலையங்களை தேர்வு செய்து, அங்கு விமானங்களை பழுது பார்த்தல், பராமரித்தல், விமானத்தில் பழுதடைந்த உபகரணங்களை நீக்கிவிட்டு புதிய உபகரணங்கள் பொருத்துதல், விமானங்களுக்கு வர்ணம் பூசி புதுப்பித்தல் போன்ற பணிகளுக்காக பழுது பார்க்கும் மையங்கள் அமைக்கப்படுகின்றன.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (17.06.2023) சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்காவை ரூ.5 கோடி மதிப்பீட்டில் பூங்கா, சுற்றுச்சுவர், பார்வையாளர் மாடம், பயிற்சி ஆடுகளம் மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற வசதிகளுடன் மேம்படுத்துவது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உ றுப்பினர் செயலர்அன்சூல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் மதன் மோகன், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் பணிகள்!

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் ஆய்வு!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - பி.கே.சேகர்பாபு மேற்கொண்டனர்!

*சென்னை, ஜூன்.18-*

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னை, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் இடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்காக அறிவித்த 34 அறிவிப்புகளில் 34 இடங்களையும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (17.06.2023) சென்னை, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணா சாலை - டேம்ஸ் சாலை - ஜெனரல் பீட்டர்ஸ் சாலை சந்திப்பில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய நடை மேம்பாலம் அமைக்கப்படுவது தொடர்பாகவும், சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்காவை ரூ.5 கோடி மதிப்பீட்டில் பூங்கா, சுற்றுச்சுவர், பார்வையாளர் மாடம், பயிற்சி ஆடுகளம் மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற வசதிகளுடன் மேம்படுத்துவது தொடர்பாகவும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் விரைவுபடுத்த வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையில் 50 இடங்களையும் நேரடியாக சென்று கள ஆய்வு செய்ய முடிவு செய்து, சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்காக அறிவித்த 34 அறிவிப்புகளில் நேற்றோடு (17.06.2023) 34 (அனைத்து) இடங்களையும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகளின்போது மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் மதன் மோகன், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.





